பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

02 12 2025 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகள் குறித்து அவையில் விவாதிக்க அரசு தயாராக உள்ளது என்று நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.
- தமிழகத்திற்கும் - வாரணாசிக்கும் இடையேயான கலாச்சார தொடர்புகளைக் கொண்டாடும் வகையில் காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
- இந்தியாவில் பல்வேறு கலாச்சாரங்கள் இருந்தபோதிலும் நாம் அனைவரும் ஒரே சிந்தனை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி வலியுறுத்தியுள்ளார்.
- வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 6 மணி நேரத்தில் வலுவிழக்க கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- உலகக் கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா - நமீபியாவை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தமிழ்நாடு உள்பட பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் குறித்து அவையில் விவாதிக்க அரசு தயாராக உள்ளது என்று மத்திய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் நேற்று எதிர்கட்சிகள் விடுத்த கோரிக்கைக்கு பதிலளித்துப் பேசிய அவர், இது தொடர்பாக அரசு பரிசீலனை செய்து வருவதாகக் கூறினார்.

அமைச்சரின் பதில் திருப்தி அளிப்பதாக இல்லை என்று கூறி காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ் கட்சிகள் வெளிநடப்பு செய்தன.

<<<<>>>>

விமானப் போக்குவரத்தில் உலகளவில் சிறந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதாக சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்துள்ள அவர், உரிய நேரத்தில் விமானங்களை இயக்குவதற்கும், கண்காணிப்பு பணிகளை நவீனமயமாக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

விமான நிலையங்களில் சைபர் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் முழு கவனம் செலுத்தப்பட்டு வருவதாக திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சி வாரணாசியில் இன்று தொடங்குகிறது.

இந்த நிகழ்ச்சி இரண்டு கட்டங்களாக இம்மாதம் 31ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இதில் பங்கேற்பதற்காக தமிழ்நாட்டில் இருந்து 7 குழுக்கள் காசிக்கு செல்கிறது.

இந்தப் பயணம் பழமையான நகரமான காசியின் பெருமையையும், தமிழகத்துடனான அதன் தொண்மையையும் அறிந்துகொள்வதுடன், ஆன்மிக அனுபவத்தைப் பெறுவதற்கும் இந்த நிகழ்ச்சி வகை செய்கிறது.

<<<<>>>>

தமிழ்நாட்டிற்கும் - வாரணாசிக்கும் இடையேயான வலுவான கலாச்சார தொடர்புகளைக் கொண்டாடும் வகையில் காசி தமிழ்ச் சங்கமம் நடத்தப்பட்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவு செய்துள்ள அவர், தமிழ் மொழிக்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆற்றி வரும் தொண்டுகள் அளப்பரியது என்று குறிப்பிட்டுள்ளார்

தமிழ் மொழியின் சிறப்பை அடுத்தகட்டத்திற்கு கொண்டு செல்லும் வகையில் ஆண்டுதோறும் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்பதன் மூலம் தமிழ் மண்ணிற்கும், தமிழ் மொழிக்கும் பெருமை சேர்ப்போம் என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்தியாவில் பல்வேறு கலாச்சாரங்கள் இருந்தபோதிலும் நாம் அனைவரும் ஒரே சிந்தனை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி வலியுறுத்தியுள்ளார்.

சென்னை ஆளுநர் மாளிகையில் நாகாலாந்து, அசாம் மாநிலங்கள் உதயமான தினத்தையொட்டி நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் நாட்டின் பன்முகத்தன்மை குறித்து பிற மாநில மக்கள் அறிந்துகொள்ள வாய்ப்பாக உள்ளது என்று தெரிவித்தார்.

தமிழ் மொழி சிறப்பு வாய்ந்த மொழியாக திகழ்கிறது என்று அவர் கூறினார்.

தமிழ் மொழியை பிற மாநில மக்கள் கற்றுக்கொள்வதில் இருக்கும் ஆர்வம், மாநிலங்களிடையே ஆரோக்கியமான நல்லுறவுக்கு வழிவகுக்கும் என்று ஆளுர் திரு. ஆர்.என். ரவி தெரிவித்தார்.

<<<<>>>>

தோட்டக்கலைத்துறை மற்றும் அதுசார்ந்த நடவடிக்கைகளுக்காக மத்திய அரசால் தமிழகத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு குறித்து மாநில அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்துறையின் வளர்ச்சிக்காக வழங்கப்பட்டுள்ள நிதி முறைகேடு செய்யப்பட்டுள்ளதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு முதலமைச்சர் உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

மாநிலத்தின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து வரும் நிலையில் மக்களிடையே திமுக தவறான தகவல்களை தொடர்ந்து கூறி வருவதாக திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டத்தில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

கணக்கீட்டுப் படிவங்களைப் பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதற்கான

கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதை மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் திரு. சரவணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**<<<<>>>>**

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 6 மணி நேரத்தில் வலுவிழக்க கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

இதனிடையே செங்கல்பட்டு மாவட்டத்தின் கடலோர பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தொடர் மழை காரணமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

மருந்துகள் மட்டுமே உடல் பருமன் பிரச்சினைக்குத் தீர்வாகாது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அமெரிக்கா - பிரிட்டன் இடையேயான புதிய வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சு வார்த்தைகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன.

<<<<>>>>

ரஷ்யாவுடனான அமைதி பேச்சுவார்த்தையில், நாட்டின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பிற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படும் என்று யுக்ரைன் அதிபர் திரு வோலோடிமிர் ஜெலன்ஸ்க்கி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாகாலாந்து மாநிலத்தில் பத்து நாட்கள் நடைபெறும் ஹார்ன்பில் திருவிழா அம்மாநில பாரம்பரிய கிராமமான கிஸாமா - வில் நேற்று தொடங்கியது.

<<<<>>>>

அஸ்ஸாமில், மகளிர் தொழில்முனைவோர் மூலதனத் தொகைக்கான காசோலையை 33,600 பெண்களுக்கு அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்தா பிஸ்வாஸ் ஷர்மா வழங்கினார்.

<<<<>>>>

விமானப்படையின் தலைமை இயக்குநராக ஏர் மார்ஷல் தேஜ்பீர் சிங், நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

<<<<>>>>

தாய்லாந்திலிருந்து சென்னைக்கு கடத்தி வரப்பட்ட, ஒரு கோடியெ 45 லட்சம் ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்களை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

<<<<>>>>

தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற 58-வது தேசிய நூலக வார விழா நிகழ்ச்சியில் சிறப்பாக பணியாற்றிய நூலகர்களுக்கு அம்மாவட்ட ஆட்சியர் திரு சதீஸ் கேடயங்களை வழங்கினார்.

<<<<>>>>

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபால சுவாமி திருக்கோயிலில் நேற்று கைசிக ஏகாதசி உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா - நமீபியாவை வென்றது.

சிலியின் சாண்டியாகோவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா 13-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

<<<<>>>>

சையத் முஷ்தாக் அலி கோப்பைக்கான ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் தமிழகம் இன்று கர்நாடகா அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் இப்போட்டி காலை 9 மணிக்கு தொடங்குகிறது.

**<<<<>>>>**